REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | இலங்கையில் 10 சதம்

சென்னை: புரட்டாசி 18உ திங்கள் (4—10—54) | வெளியூர்: புரட்டாசி 19உ செவ்வாய் (5—10—54)

மலர்: 2 | இதழ்: 96

டி. டி. கிருஷ்ணமாச்சாரியின் பதவி பறிபோகுமா?

சவ்வரிசிப் பிரச்சினை சல்லடம் கட்டுகிறது!

கல்கத்தா நகர மன்றத்தின் விபரீதம்!

பண்டிதருக்கு மேயர் தூது விடுகிறார்!

"வெளிநாட்டிலிருந்து சவ்வரிசி இறக்குமதி செய்யப்படுவதில்லை. சென்ற பதினைந்து ஆண்டுகளாகவே, உள்நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் மரவள்ளிக் கிழங்கின் மாவிலிருந்து சவ்வரிசி தயாரிக்கப்பட்டு, நாடெங்கும் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

"இத்தொழிலில் தென்னிந்தியாதான் முதல் இடத்தில் இருந்து வருகிறது. இந்த சவ்வரிசியை, மக்கள் உணவுப் பொருளாக உபயோகிக்கப்பட்டு வருவதோடு, நெசவாளிகளுக்கு வேண்டிய பசைக்காகவும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

கல்கத்தாவில் விற்பனை ஆகவந்த மரவள்ளிக் கிழங்கு சவ்வரிசியை, கல்கத்தா நகர மன்றம் பறிமுதல் செய்துவிட்டது. அதன் கோரிக்கையினை வங்க சர்க்காரும் மேற்கொண்டு உள்நாட்டு சவ்வரிசி விற்கப்படுவதற்குத் தடை விதித்துவிட்டது.

இது பற்றி மக்கள் சபையில் பிரச்சினை எழுந்தபோது வியாபார மந்திரியாக இருக்கிற டி. டி. கிருஷ்ணமாச்சாரி, கல்கத்தா நகர மன்றத்தின் நடவடிக்கையை, 'வாய்த் துடுக்காக' கூறினதாக மேற்படி நகர மன்றம் சீறி இருக்கிறது.

மந்திரியாரை பண்டிதரின் அமைச்சர் குழுவிலிருந்து விலக்கிவிட வேண்டுமெனவும், மேற்படி பிரச்சினை குறித்து அவர் கூறிய வாசகங்களை சபை நடவடிக்கை ஏடுகளில் இருந்து நீக்கிவிட வேண்டுமெனவும், கல்கத்தா நகர மன்ற உறுப்பினர்கள், கட்சி வேறுபாடு இல்லாது, ஒரு மனதாகக் கருத்தறிவித்து இருக்கிறார்கள்.

நகர மன்ற முடிவை பெருந் துணையாகக் கொண்டு, மன்றத் தலைவர், வியாபார மந்திரி தம்முடைய குற்றச்சாட்டை வாபஸ் பெற வேண்டும்; இல்லாவிடில் பதவியை விட்டு விலக்கப்பட வேண்டும் என, பண்டித நேருவுக்குக் கடிதமொன்று வரைந்துள்ளதாகத் தெரிகிறது.

வெளிநாடுகளில் இருந்து சவ்வரிசியை இறக்குமதி செய்ய வேண்டும் என கல்கத்தா நகர மன்றம் கோரவில்லை; எனவே சந்திரனைப் பிடித்துத் தர நகர மன்றம் ஒப்பாரி வைக்கிறது என அமைச்சர் கூறியுள்ளது உண்மையல்ல என்று, அக்கடிதத்தில் மேயர் அறிவித்துள்ளாராம்.

சவ்வரிசி என்ற பெயரில் மரவள்ளிக் கிழங்கினாலான பொருளை விற்பதால், விற்பனை வரியை வங்க சர்க்கார் இழந்து வருகிறது எனவும், அக்கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

காங்கிரஸ் செயலாளர் அகர்வாலின் கார் மறிக்கப்பட்டது!

பசு வதையைத் தடை செய்யக் கோரி "கோபுத்திரர்கள்" ஆர்ப்பாட்டம்!

கண்டிக்க வேண்டிய செயல் என அகர்வால் அறிவிப்பு!

ஆக்ரா, அக். 2—

மதுரா எனும் இடத்தில் பொதுக்கூட்டம் ஒன்றில் பேசிவிட்டு ஆக்ராவிற்குத் திரும்புகையில் அ. இ. காங்கிரஸ் செயலாளரை 'ஜன சங்' தொண்டர்கள் வளைத்துக்கொண்டு காரை வழிமறித்து, பசு வதையைத் தடை செய்யும் சட்டம் கொண்டுவரக் கோரினார்கள் என்று தெரிகிறது.

தோழர் அகர்வால் தனது சொற்பொழிவில், "இந்தியாவில் கால்நடைகள் பாதுகாக்கப்படும் முறையையும், அதிலும் பசுக்களும் காளை மாடுகளும் பாதுகாக்கப்படுவதில், விவசாயக் கண்ணோட்டத்துடன், சர்க்கார் விசேட கவனம் செலுத்தி வருவதாகவும் கூறினதாகத் தெரிகிறது.

தோழர் அகர்வால், தன் காரை மறித்துக்கொண்டு வழிவிட மறுத்துவிட்ட தொண்டர்களுக்கு தானும், தனது சக காங்கிரஸ் நண்பர்களும் எவ்வளவோ எடுத்துச் சொல்லியும், தொண்டர்கள் வழிவிட மறுத்துவிட்டார்கள் என்று கூறினார்.

பிறகு மதுரா மாவட்ட நீதிபதிக்கும், போலீஸ் அதிகாரிக்கும் போன் மூலம் இதுபற்றி தகவல் அனுப்பியதாகவும், அதற்கும் பிறகு மாவட்ட நீதிபதியை நேரில் சந்தித்து, சம்பவம்பற்றி விரிவான மனு ஒன்று தந்ததாகவும் அகர்வால் அறிவித்தார்.

"இத்தகைய சம்பவங்கள் மதுரா மாவட்டத்தில் முன்பே பலமுறை நடைபெற்றிருந்தும் போலீசார் விழிப்புணர்வுடன் இருப்பதாகக் காணோம்; கூட்டத்தினருகில் போலீசார் ஒருவர்கூட இல்லை; கார் மறிக்கப்பட்ட சம்பவம் நடைபெற்ற போதும் எந்தப் போலீசாரும் உதவிக்கு வரவில்லை. உத்தரபிரதேச சர்க்கார் இந்த பசு வதைத் தடை இயக்கத்தவர்கள், அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் நடந்துகொள்வதைத் தடுப்பதில் உறுதியுடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எண்ணுகிறேன்.

ஜனநாயகம் சரிவர அமுல் செய்யப்பட இத்தகைய பலாத்காரமான செயல்கள் அனுமதிக்கப்படக் கூடாதென எண்ணுகிறேன்," என்று காங்கிரஸ் செயலாளர் அகர்வால் குறிப்பிட்டார்.

கப்பல் தொழிலாளர் வேலை நிறுத்தம்

5000 பேர் கலந்துகொண்டு வெற்றிபெற்றனர்

பம்பாய், அக். 2—

'காந்தி ஜெயந்தி'யை முன்னிட்டு சனிக்கிழமையன்று தந்திருந்த விடுமுறைக்காக வழக்கமாகத் தரப்படும் ஞாயிற்றுக்கிழமை விடுமுறையை ரத்து செய்து உத்திரவு பிறப்பித்த அரசாங்கத்தின் போக்கை எதிர்த்து பம்பாயில் உள்ள கப்பல் துறைத் தொழிலாளர்கள் 5000 பேர் இன்று ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தம் செய்தனர்!

கப்பல் துறைத் தொழிலாளர் சங்கம் இந்த வேலைநிறுத்தத்தை ஏற்பாடு செய்திருந்தது.

வேலை நிறுத்தம் மகத்தான வெற்றியைத் தந்ததாக சங்கத்தினர் அறிவித்துள்ளனர்.

இந்தியாவில் முதலாவது போஸ்ட்மாஸ்டர்-ஜெனரல் 1774-ல் நியமிக்கப்பட்டார்; அச்சமயம் நாட்டில் ஆறு அஞ்சல் நிலையங்களே இருந்தன.

30 கைதிகள் தப்பி ஓடினர்

சிறை வார்டர்கள் சுட்டதில் இருவர் மரணம்

காட்மண்டு, அக். 2—

கோரக்பூர் மாவட்டத்தில் உள்ள, இந்திய எல்லையிலிருந்து 10 மைல் தொலைவிலிருக்கும் தௌலி சாவானா(?) எனும் ஊரில் இருக்கும் சிறை ஒன்றிலிருந்து சுமார் 30 கைதிகள் சிறைக் கதவுகளை உடைத்து தப்பி ஓடிவிட்டனர் என்று தெரிகிறது.

காவல் புரிந்துவந்த சிறை வார்டர்கள் துப்பாக்கிப் பிரயோகம் செய்து, தப்பியோடிய இருவரைச் சுட்டுக் கொன்றுவிட்டனர்; 5 பேர்கள் மீண்டும் சிறைப் பிடிக்கப்பட்டனர்.

எஞ்சிய இருபத்து மூன்று பேர்களும் தப்பியோடிவிட்டதாகத் தெரிகிறது.

அவர்கள் கையில் துப்பாக்கிகளும் வைத்திருந்தனராம். தப்பிச் சென்றுவிட்ட அவர்களைத் தேடிப்பிடிக்கும் வேலை தீவிரமாக நடைபெறுகிறதாம்.

எப்பொழுது இந்தக் கைதிகள் தப்பி ஓடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டனர் என்பதைச் செய்தி தெளிவாகத் தெரிவிக்கவில்லை.

பண்டிதருக்கு பிரதமர் பதவி சலித்துவிட்டதாம்!

காங்கிரஸ் தலைமைப் பதவியை விட்டுவிட உத்தேசமில்லையாம்!

கோச்சி, அக். 3—

"காங்கிரஸ் தலைமைப் பதவியை விட்டுப்போவதாக நான் எங்கும் கருத்தறிவிக்கவில்லை" என்று பண்டித நேரு, பத்திரிகை நிருபர் ஒருவரின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் கூறினார்.

சில பத்திரிகைகளில் அம்மாதிரி செய்தி வெளியாகியுள்ளதாக சுட்டிக் காட்டியபோது பண்டிதர் குறிப்பிட்டதாவது:

"நான் பிரதம மந்திரி பதவி வகிப்பதில் தான் சலிப்படைந்து போயிருக்கிறேன்; அப்பதவியை விட்டு விலகிவிடவும் விரும்புகிறேன்," என்று கூறினார்.

இந்தோனேஷிய அதிகாரி

அமெரிக்காவை விட்டு வெளியேற உத்திரவு

இந்தோனேஷிய அரசாங்க முன்னாள் அதிகாரியான ஹூசன் டிரோ(?) என்பவரை உடனடியாக அமெரிக்காவை விட்டு நவம்பர் 1-ந் தேதிக்குள் வெளியேறி விடுமாறும், இல்லாவிடில் அவர் பலவந்தமாக வெளியேற்றப்படுவார் என்றும் அமெரிக்க அரசாங்கம் அறிவித்துள்ளதாம்.

வெள்ளையரின் நிறவெறி

நீக்ரோ குழந்தைகளைத் தாக்கிய அநீதி!

தாக்கியவர்கள் தண்டனை பெற்றனர்

நீக்ரோவரை எதிர்த்து ஆர்ப்பாட்டம்!

பால்டிமோர், அக். 2—

நீக்ரோ குழந்தைகள், வெள்ளையர் குழந்தைகளுடன் கல்வி பெறுவதைக் கண்டித்து வெள்ளையர்கள் இங்கு ஆர்ப்பாட்டம் நடத்தினார்களாம்; அதைத் தடுத்த போலீசாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டிருக்கிறது.

14 வயதுடைய ஒரு நீக்ரோ மாணவர், முகத்தில் குத்திக் காயப்படுத்தப்பட்டார்.

அவரைத் தாக்கிய குற்றத்திற்காக, 25 வயதுடைய வெள்ளையர் இனத்தைச் சேர்ந்த துறைமுகத் தொழிலாளி ஒருவர் 100 டாலர் அபராதம் விதிக்கப்பட்டதாகவும் தெரிகிறது.

தவறான முறையில் நீக்ரோ மாணவர்களிடம் நடந்துகொண்டதற்காக மூன்று வெள்ளைக்காரர்கள் 25 டாலர் அபராதம் விதிக்கப்பட்டனராம்.

நீக்ரோ மாணவன் ஒருவனையும், ஒரு மாணவியையும், சூழ்ந்துகொண்டு தாக்க முற்பட்ட வெள்ளைக்கார இள வெறியர்களிடமிருந்து அவர்களை, உடற்பயிற்சி ஆசிரியராகவிருக்கும் ஒரு இளம் பெண் காப்பாற்றியதாகத் தெரிகிறது.

இந்த இனவெறி ஆர்ப்பாட்டம், பால்டிமோரில் உள்ள ஆறு பள்ளிகளில் நடைபெற்றதாகத் தெரிகிறது.

சுமார் 5 கோடி 6 லட்சம் கிராமவாசிகள்— அதாவது இந்திய கிராமவாசிகளில் ஐந்தில் ஒருவர்—சமுதாய அபிவிருத்தித் திட்டங்கள், தேசிய விஸ்தரிப்புத் திட்டங்கள் ஆகியவற்றின் மூலம் பயன் அடைந்து வருகின்றனர்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—10—54 திங்கள்

வளர்ந்து வரும் ஊழல்!

இந்திய இராணுவத்திற்குத் தேவையான பொருட்களைப் பிறநாடுகளில் கொள்முதல் செய்யும் வகையில், நேர்ந்துள்ள ஊழல்களை, மக்கள் சபையின் பொதுக் கணக்குக் குழு எடுத்துக் காட்டி, மேலும் அதுபோன்ற ஊழல்கள் நேராமல் தடுப்பதற்கான வழி வகைகளையும் சுட்டிக் காட்டியிருக்கிறது.

1951—52 ஆகிய இரண்டு ஆண்டுகளிலும், மேற்படி துறையில் நடந்துள்ள ஊழல்களைத்தான் அக்குழு ஆராய்ந்திருக்கிறது. இதற்கு முன்னும் நடைபெற்ற கொள்முதல் விவகாரத்தில் நடைபெற்றுள்ள ஊழல்களையோ அல்லது ஆராய்ந்தறியப்பட்டுள்ள இரண்டு ஆண்டுகளைப் போக சென்ற ஆண்டிலும் நடைமுறை ஆண்டிலும் நடைபெற்றுள்ள சர்க்கார் கொள்முதல் பற்றியோ ஆராய அக்குழுவிற்கு வாய்ப்புக் கிடைத்ததாகத் தெரியவில்லை.

ஆராய்ந்து அறியப்பட்ட இரண்டு ஆண்டுகளில் நடைபெற்ற இராணுவ இலாகா கொள்முதல் பற்றி சாதாரணமாக எல்லாத் துறைகளிலும் மேற்கொள்ளப்படும் வாணிப முறையைக்கூட, இராணுவத்திற்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கும் பொறுப்பேற்றுக் கொண்டுள்ள இந்திய சர்க்கார் அதிகாரிகள், கடைப்பிடித்து ஒழுகத் தவறிவிட்டிருக்கிறார்கள் என்று வருந்திக் கூறியிருக்கிறது அதுவுமல்லாமல், பொருட்களைக் கொள்முதல் செய்வதற்காக இடைத் தரகர்களைத் தேர்ந்தெடுக்கும் வகையிலும், ஒவ்வொரு இனத்திலும் அந்த அதிகாரிகள் நடந்துகொண்டிருப்பது நியாய விரோதமானதாக இருக்கிறது எனவும், அந்தவகைகளுக்கு சாதாரண நடைமுறை சிக்கலையோ, விதிகளில் உள்ள கோளாறுகளையோ ஒரு புகலாகக் கொள்ள முடியாது எனவும், கணக்குக் குழு சுட்டிக் காட்டி இருக்கிறது.

தம்மிடம் ஒப்படைக்கப்பட்டுள்ள குறைந்த அதிகாரம் பிற்குள், குற்றங்களை மேலெழுந்தவாரியாகச் சுட்டிக்காட்டுவதைத் தவிர்த்து, மேலும் விரிவாகச் சொல்வதற்கு முடியவில்லையே என அக்கணக்குக் குழு தமது இயலாமையை அம்பலப்படுத்தியும் இருக்கிறது. இவ்வகை ஊழல் கொள்முதல் பேரங்களை நடத்தினதற்காகக் காரணஸ்தர்களாக உள்ள தனிநபர் அதிகாரிகளைக் கண்டுபிடிப்பது என்பது, உயர்நீதிமன்ற நீதிபதிகளைக் கொண்ட தனிக் குழு ஒன்றினால்தான் இயலும் எனவும் அக்குழு கருத்தறிவித்தும் இருக்கிறது.

நான்கு இனங்களில், அதாவது, ஜீப்கார் வாங்கினது; இராணுவத்திற்குத் தேவையான பொருட்களுக்காகச் செய்துகொள்ளப்பட்ட இரு ஒப்பந்தங்கள்; விமானப் படைக்கு வாங்கிய பொருட்கள்; இந்திய இராணுவத்திற்காக இங்கிலாந்தில் வாங்கப் பெற்ற கம்பளங்கள், ஆகிய நான்கு இனங்களிலும் நடந்துள்ள ஊழல்களைப் பற்றி மட்டுமே அக்குழுவின் ஒன்றாவது அறிக்கை அறிவிக்கிறது.

இராணுவ இலாகா தனது உத்தேச வரவு – செலவுக் கணக்கை உருவாக்குவதில், இன்னமும் திருந்தியளிக்கும் நிலை ஏற்படவில்லை எனவும் எடுத்துக்காட்டாக, ஒரே பொருளைக் கொள்முதல் செய்வதற்காக இருமுறை பணம் ஒதுக்கப்பட்டுக் கணக்கிடப்பட்டிருப்பதாகவும் அக்குழு தனது அறிக்கையில் எடுத்துக் காட்டி இருக்கிறது. இரண்டு தடவை குறிப்பிட்டிருப்பது, குறைந்த தொகையாகவும் இல்லை 1,05 60 000 ரூபாயை, ஒரே பொருளைக் கொள்முதல் செய்வதற்காக, இராணுவ இலாகா, தனது உத்தேச வரவு-செலவு திட்டத்தில் ஒதுக்கி வைத்திருக்கிறது. பிற,

இந்திய சர்க்காரின் ஜீப்கார் கொள்முதல் விவகாரம், ஏற்கனவே ஒரு முறை சந்தி சிரித்துப் போய் இருக்கிறது, இங்கிலாந்திலுள்ள போதிய மூலதனத்தைக் கொண்டு இயங்காத ஒரு கம்பெனியிடம், திருத்தம் செய்து உருவாக்கப்பட்ட 2000 ஜீப்கார்களை வாங்குவதற்கு இந்திய சர்க்கார் ஏற்கனவே ஒப்பந்தம் செய்து கொண்டு, முன் பணமாக அக்கம்பெனிக்குப் பணம் கொடுத்துவிட்டக் காரணத்தால் ரூபாய் 19 லட்சம் இந்திய சர்க்காருக்கு நஷ்டமாயிற்று.

அக்கம்பெனியின் கொடுக்கல் வாங்கல்களை அப்படியே ஒப்புக்கொண்ட வேறு ஒரு கம்பெனியிடம், இந்திய சர்க்கார் ஜீப் ஒன்று 458 பவுன் வீதம் 1 007 ஜீப் கார் வாங்குவது எனவும், அம்மொத்த ஜீப் கார்களையும் 1952 செப்டம்பர் மாதத்திற்குள் அக்கம்பெனி இந்தியாவில் கொண்டு சேர்த்தாகவேண்டும் எனவும், 1951-ல் இந்திய சர்க்கார், புதிய கம்பெனியிடம், ஒரு புதிய ஒப்பந்தத்தை செய்து கொண்டது கொடுத்த வாக்குறுதிகளுக்கு மாறாகவும், ஒப்பந்த விதிகளுக்கும் புறம்பாகவும், இதுவரை 49 ஜீப் கார்களைத்தான், அக்கம்பெனி. இந்தியாவிற்குக் கொடுத்திருக்கிறது. அந்த 49 ஜீப் காரிலும் ஒன்று. சோதிக்கும் போதே பழுதாகி எனவே பெங்களூரில் நிறுத்தப்பட்டும் இருக்கிறது.

முதல் கம்பெனியில் செய்து கொண்ட ஜீப் கொள்முதல் ஒப்பந்தத்தின் விளைவாக இந்திய சர்க்காருக்கு ஏற்பட்ட 19 லட்ச ரூபாய் மொத்த நஷ்டத்தில், புதிய கம்பெனி 49 ஜீப் கார்களை தந்திருக்கும் காரணத்தினால், 94 667 ரூபாய்தான் குறைந்து இருக்கிறது.

இனி ஒப்பந்த விதியின்படி இந்தியாவுக்கு ஒரு ஜீப்கூட சப்ளை செய்ய முடியாது எனவும் அறிவித்துவிட்டதோடு, ஒப்பந்த முறிவுக்கு இந்திய சர்க்காரையே பொறுப்பாளியாக்கவும் முனைந்திருக்கிறது.

அக்கம்பெனிமீது சிவில் வழக்குத் தொடுத்து, தனக்கு ஏற்பட்டுள்ள இலட்சக்கணக்கான ரூபாயை வசூலிக்க இந்திய சர்க்கார் ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

இங்கிலாந்தில் உள்ள ஒரு கம்பெனியிடம் 1948-ல் இந்திய சர்க்கார் 2000 ஜீப் வாங்குவது பற்றி செய்து கொண்ட ஒப்பந்தத்தில் ஏற்பட்ட ஊழல் குறித்து, 1951-ல் மக்கள் சபையில் புயல் வீசத் தொடங்கியது.

அப்பொழுது, ஜீப் ஒப்பந்தம் பற்றி கூறப்பட்ட 'ஊழல்' புகாருக்கு, அதை தடுத்து உச்சரிக்கப்பட்ட 'ஊழல்' என்ற சொல்தான் அந்த விவகாரத்தில் உள்ள 'ஊழல்' என்றும், வேறு உண்மையான ஊழல் எதுவும் நடைபெறவில்லை என்றும், பிரதமர் பண்டித நேரு ஆத்திரமாகக் கூறினார்.

சிறந்த கண்காணிப்பின்மையும், தாமதமும்தான் குறைபாட்டிற்குக் காரணமேயல்லாது, சம்பந்தப்பட்டவர்களின் ஒழுக்கக் கேடோ, வேண்டுமென்றே காட்டிய அலட்சியமோ குறைக்குக் காரணம் அல்ல என்று, மேலும் பிரதமர் அப்பொழுது சமாதானம் கூறினர்.

முதலில் செய்துகொண்ட ஜீப் ஒப்பந்தத்தில் கோர்ந்த 'தவறை' உணர்ந்து கொண்ட பின்னர்தான், 1951-ல் புதிய கம்பெனியுடன் ஜீப் கார் கொள்முதல் ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

புதிதாகச்செய்துகொள்ளப்பட்ட ஒப்பந்தம் நிலைமையை சீராக்கும் எனவும், முதல் உடன்படிக்கையினால் ஏற்பட்ட நஷ்டம் இதனால் நோய்விடும் எனவும் பாதுகாப்பு மந்திரி நம்பிக்கையும் தெரிவித்தார். ஒப்பந்தம் நன்கு நிறைவேற்றப்படவில்லை எனவும், முழு விவகாரத்தையும் நுணுகி ஆராய வேண்டுமெனவும் 1952-ல் குன்சுரு கோரினர். ஆனால், அதற்குச் சமாதானமாக, ஒப்பந்தம் நிறைவேற்றப்படும் எனவும், எனவே ஆய்வுக் குழுவிற்கு அவசியமே இல்லை யாது எனவும் இந்திய சர்க்கார் வாக்களித்தது.

மக்கள் சபை பொதுக் கணக்குக் குழு, துடிக்கிறது, துயருறுகிறது, மக்கள் மனம் வாழாயிற்றே அதிகாரிகளின் அலட்சியம் போக்கினால் எனப் பரிதவிக்கிறது.

பிரதமர் பண்டிதரோ, நடைமுறை அனுபவத்தைச் சிறிது நேரம் மறந்திருக்க, படித்தவன் பழக்கனைக்குப் பார்ப்பதுபோல், பூர்வ வரலாற்றுப் பெருமையில் பூரிப்புக்கண்டு பிரத்தியட்ச நடைமுறை ஊழலை மறக்கப் பார்க்கிறார்-மற்றவர்களும் மறந்திருக்க வேண்டுமென விழைகிறார். மேலும் அடுத்து எழுதுவோம்.

எஃகு உற்பத்தித் தொழிற்சாலை அமைக்க

இன்னுமொரு நாடு முன்வருகிறது

இந்தியாவில் எஃகு உற்பத்தித் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு சோவியத் ரஷ்யா முன் வந்துள்ளதை ஒட்டி, இன்னுமொரு நாடும் முன்வந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

இங்கிலாந்தில் உள்ள பெரிய எஃகுத் தொழிற் கம்பெனியினருடன், இந்தியத் தொழிலதிபர்கள் தனிப்பட்ட முறையில் இந்தியாவில் ஒரு எஃகு தொழிற்சாலை நிறுவுவதுபற்றி பேச்சு வார்த்தைகள் நடத்தினாராம்!

சோவியத் திட்டப்படி, ரஷ்ய நிபுணர்கள், திறவப்படும் எஃகுத் தொழிற்சாலையை நிர்மாணிப்பார்கள்; இந்திய என்ஜினியர்களுக்கும் பயிற்சி அளிப்பார்கள்!

சோவியத் அந்த தொழிற்சாலையில் முதலீடு செய்யும் பணத்திற்கு $2\frac{1}{2}$ சதவீதம் வட்டி பெறும் எனத் தெரிகிறது.

கிராமங்கள் தோறும் காந்தி இல்லங்கள்!

சென்ற செப். 27-ல், புதுடில்லியில் கூடிய காந்தி நினைவு நிதிக் குழுக் கூட்டத்தில், நாட்டிலுள்ள கிராமங்கள் எல்லாவற்றிலும் காந்தி இல்லங்கள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற நேருவின் யோசனை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதன் பேரில், அந்தக் குழுவினர் சென்னை ராஜதானியிலே கட்டப்பட்டு வரும் காந்தி மண்டபத்துக்கு நன்கொடையாக 2 லட்சம் தர முன்வந்துள்ளது எனவும் தெரிகிறது.

பர்மிய எல்லையில் உள்ள அன்னியத் துருப்புகள்!

ஐ நா. சபை நடவடிக்கை!

பர்மாவில் உள்ள அன்னியத் துருப்புகளை வெளியேற்றுவது குறித்து மூன்று நாடுகள் குழு ஒன்று, ஐ நா. சபைக்குத் தெரிவித்துள்ள தகவலின்படி இதுவரை சுமார் 7,000 தேசிய சீனத் துருப்புகள் பர்மிய எல்லையிலிருந்து பார்மோசாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும், இன்னும் சுமார் 6,000 துருப்புகள் எல்லையை விட்டு அகல மறுத்து விட்டிருப்பதாகவும், அவர்களையும் அகற்ற முயற்சிகள் நடந்து கொண்டிருப்பதாகவும் தெரிய வருகிறது.

சீன உள்நாட்டுப் போரின் போது தேசியச் சீனப் படையைச் சேர்ந்த சுமார் 12,000 துருப்புகள் பர்மிய எல்லைக்குள் புகுந்திருப்பதாக, பர்மா புகார் செய்திருந்தது.

சென்ற ஆண்டு இதுபற்றி விசாரித்த ஐ நா. சபை அந்த தேசியச் சீனத் துருப்புகளை வெளியேற்றுவது பற்றி எடுத்துக் கொண்ட நடவடிக்கையின்படியே இதுவரை சுமார் 5,328 துருப்புகளும், அவர்களது குடும்பத்தார்களாக 1,142 பேர்களும் வெளியேறியுள்ளனர் எனவும், இன்னும் சுமார் 6,000 பேர் வெளியேறுது இருப்பதால் பர்மாவிற்கு இருந்த ஆபத்து நீங்கிவிடவில்லை எனவும் சொல்லப்படுகிறது.

பார்மோசாவில் உள்ள தேசிய அரசாங்கம் அந்தத் துருப்புக்களைத் திரும்ப அழைத்துக் கொள்வது பற்றி தனதுஅனைத்தைச் செய்ய சம்மதம் தந்திருப்பதாயும் தெரிகிறது.

இந்திய மோட்டார்களின் விலை அதிகமாயிருப்பதின் காரணங்கள்

டி. டி. கிருஷ்ணமாச்சாரி விளக்கம்!

மோட்டார் உற்பத்தியை தேசிய மயமாக்க டாக்டர் கிருஷ்ணசாமி யோசனை

"இந்தியாவின் மோட்டார் தொழில் இப்போதிருப்பதைக் காட்டிலும் இன்னும் ஆறு மாதங்கட்குப் பிறகு செழிப்புடையதாயிருக்கும்;

"இந்தியாவிலேயே உற்பத்தியாகும் மோட்டார்களின் விலை அதிகமாயிருப்பதற்குக் காரணங்கள் பல; அவற்றுள் மோட்டார்களை பல வேறு இடங்களுக்குக் கொண்டு செல்வதற்காக ரயில்வே இலாகா வாங்கும் கட்டணம், மாநில அரசாங்கங்கள் விதிக்கும் விற்பனை வரி ஆகிய இரண்டும் முக்கியமானவையாகும்;

"1961-ல், நாம், சுமார் 1 இலட்சம் கார்களாவது உற்பத்தி செய்ய வேண்டுமென, ஏன் திட்டமிடக் கூடாது என்பதற்கு எனக்குக் காரணம் தெரியவில்லை;

"இன்று மொத்தம் கஷ்டமும் இருக்கிறது. எப்படி மோட்டார் கார்களின் விற்பனையை அதிகப்படுத்துவது என்பதும் ஒரு பிரச்சினையாகும்,"

—என்று, மத்திய அரசாங்க வர்த்தக, தொழில் மந்திரி டி. டி. கிருஷ்ணமாச்சாரி கூறினர்.

இதற்கு முன் பேசிய டாக்டர் ஏ. கிருஷ்ணசாமி, கார்களின் விலை குறைக்கப்பட வேண்டுமென்று கோரியதுடன் கார் உற்பத்தித் தொழிலை தேசியமயமாக்க வேண்டும் என்றும் யோசனை கூறினர்.

டிரீஸ்டி பிரச்சினை முடிவுறும்?

இத்தாலி, யூகோஸ்லாவியா ஆகிய நாடுகளுக்கிடையே 'டிரீஸ்டி' பற்றி இருந்துவந்த சிக்கல் தீர்ந்துவிடலாம் எனத் தெரிகிறது.

ஐரோப்பாவில், சுமுகமாக, எல்லா சமூக அமைப்பு அரசாங்கங்களும் அமைதியுடன் வாழும் கொள்கைக்கு ஊக்கமளிக்கும் வகையில், இத்தாலிய நாட்டவர் டிரீஸ்டி பற்றி கொண்டுள்ள கருத்தை யூகோஸ்லாவியா ஏற்றுக்கொள்ளலாம் என்று பத்திரிகைச்செய்தி ஒன்று கூறுகிறது.

நேரு—அலி கடிதங்கள்

விரைவில் வெளியிடப்பெறுமாம்

பண்டிதர் நேருவுக்கு பாக். பிரதமர் முகமத் அலிக்குமிடையே, அகதிகள் சொத்து, தண்ணீர் தகராறு, காஷ்மீர் சிக்கல் போன்ற விவகாரங்களில் நடைபெற்ற கடிதப் போக்குவரத்துக்களை, பாக். பிரதமர் விருப்பத்திற்கிணங்க, பண்டிதர் வெளியிடவிருப்பதாகத் தெரியவருகிறது.

1953 ஆகஸ்டில், கராச்சியில் பாக். பிரதமரை பண்டிதர் சந்தித்ததற்கு முன்பிருந்தே இருவருக்கும் இடையில் கடிதப் போக்குவரத்து நடந்துகொண்டிருந்தன.

யூகோ பொருளாதாரத் தடை நீக்கம்

கடந்த ஆறு ஆண்டு காலமாக யூகோஸ்லாவியா மீது பொருளாதாரத் தடையை ரஷ்யா விதித்திருந்தது. அத்தடையை, அங்கு சென்றுள்ள சோவியத் வியாபாரக் குழு, யூகோ வெளிநாட்டு வர்த்தகக் குழுவுடன் செய்துகொண்ட உடன்படிக்கையின்படி, நீக்கிவிட்டதாகத் தெரிகிறது.

தூத்துக்குடி சதி வழக்கு

18 தோழர்கள் வாக்குமூலம்

திருநெல்வேலி, செப். 27—

தூத்துக்குடி சதி வழக்கில், அரசாங்கத் தரப்பு சாட்சிகள் விசாரணை முடிந்து, 27-9-54-ல், திருநெல்வேலி அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி கே. இராதா கிருஷ்ணமுதலியார் முன்னிலையில் எதிரிகள் வாக்குமூலங்கள் பதிவு செய்யப்பட்டன.

முதலாவதாக தோழர் கே. வி கே. சாமி, தமது வாக்குமூலத்தில் கூறியதாவது:—

"நான் தி. மு. கழகத்தில் ஒரு சாதாரண அங்கத்தினனே தவிர போலீசார் கூறியிருப்பதுபோல பெரிய பிரமுகர் இல்லை; சென்னையிலுள்ள தலைமைக் காரியாலயத்தில் பொதுச் செயலாளர் எனப்படுபவர் மட்டும்தான் இருப்பாரே தவிர, வேறு தலைவர்களோ, பிரமுகர்களோ கிடையாது; வெளியூர்களில் இருக்கும் கிளைக் கழகங்களில் செயலாளரும், அவருக்குக்கீழ் செயற்குழுவும் உண்டு; இக்கிளைக் கழகங்களுக்குத் தலைமைக் காரியாலயத்திலிருந்து உத்திரவுகள் வரும்; சென்ற ஆண்டு ஜூலை மாதம் 14-ந் தேதி நாகம்மாள் வாசகசாலையில் ஒரு கூட்டம் நடைபெற்றதாகவும், அந்தக் கூட்டத்தில் நான் கலந்து கொண்டதாகவும், அப்போது, ஜூலை 15-ந் தேதி இரயில் நிறுத்தம் செய்ய வேண்டுமென்றும், போலீசார் பலாத்காரத்தைப் பிரயோகித்தால் இரயில் பாலங்களைத் தீயிடுவது என்றும் முடிவு செய்யப்பட்டதென்றும் சாட்சிகள் கூறியது பற்றி எனக்கொன்றும் தெரியாது; மேலும் தி மு கழகச் சார்பில் அப்படிப்பட்ட ஒரு கூட்டமும் நடைபெறவில்லை; தூத்துக்குடி நகரசபைத் தேர்தலில் போட்டியிட்ட தி. மு கழக ஆதரவாளர்கள் காங்கிரஸ் அபேட்சகர்களை வெற்றிகொண்டதின் காரணமாக, பிராமணர்களின் ஆதரவு பெற்ற முதல் மூன்று அரசாங்கத் தரப்பு சாட்சிகளும் இவ்வாறு இந்த வழக்கை ஜோடித்திருக்கின்றனர்."

இரண்டாவதாக தோழர் எம். இரத்தினம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:—

"நான், சென்ற ஆண்டு ஜூலை மாதம் 14-ந் தேதி இரவு எனது கடையில் இருக்கும்போது கைது செய்யப்பட்டேன்; அதைத்தவிர நான் நடைபெற்றவைகள் பற்றிய விவரம் எனக்கொன்றும் தெரியாது; நான், 12-ந் தேதி நடைபெற்ற ஒரு பொதுக்கூட்டத்தில் பேசுகையில், 'போலீஸ் ஸ்டேஷனைக் கொளுத்த வேண்டும்' என்று கூறியதாக சாட்சி சொன்னது பொய்; நாகம்மாள் வாசகசாலையில் நடைபெற்ற கூட்டம் பற்றி எனக்கொன்றும் தெரியாது. என்மீது சுமத்தப்பட்டிருக்கும் வழக்கு, எதிரிகளின் பொய்யான ஜோடிப்பாகும்."

மூன்றாவதாக தோழர் தங்கப்பழம் தமது சாட்சியத்தில் கூறியதாவது:—

"நாகம்மாள் வாசகசாலையில் நடைபெற்ற கூட்டம் பற்றி எனக்கொன்றும் தெரியாது; நான் 4-வது எதிரியுடன் ஒரு ஓட்டலில் காப்பி அருந்திக் கொண்டிருக்கையில், போலீஸ் சர்க்கிள் இன்ஸ்பெக்டர் என்னைக் கைது செய்தார்; அதன் பின் நடைபெற்ற சம்பவங்கள் பற்றி எனக்கொன்றும் தெரியாது."

நான்காவதாக தோழர் சிவசாமி தமது வாக்குமூலத்தில் கூறியதாவது:—

"நாகம்மாள் வாசகசாலைக் கூட்டம் பற்றி எனக்கொன்றும் தெரியாது; நான் 3-வது எதிரியுடன் காப்பி சாப்பிட்டுக்கொண்டிருக்கையில், போலீசாரால் கைது செய்யப்பட்டேன்."

ஐந்தாவதாக தோழர் என். நடராசன் கூறியதாவது:—

"சென்ற வருடம் (1953) நான் தூத்துக்குடி தி. மு கழகச் செயலாளராக இருந்தேன்; மூன்றிய 4 தோழர்களும் கழகத்தினுள்ள சாதாரண உறுப்பினர்கள்தான்; சுமார் 6 வருடங்களுக்கு முன்பாகவே தி. மு. கழகம், தி. கழகத்திலிருந்து பிரிந்துவிட்டது; பிராமணர்களின் ஆசாரங்களைத்தான் தி. மு கழகம் வெறுக்கிறதே தவிர, அவர்களை வெறுப்பது தி. கழகம்தான்; ஆகவே தி கழகத்தைச் சேர்ந்த வாசகசாலையில் தி. மு கழகம் கூட்டம் நடத்த எந்த விதத்திலும் முடியாத காரியம்; நாகம்மாள் வாசகசாலைக் கூட்டம் பற்றி முதல் மூன்று சாட்சிகளும் குறிப்பிட்டது தவறு; ஜூலை மாதம் 14-ம் தேதி வடக்கூர் மார்க் கிளப்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது; அதில் 15-ந் தேதியன்று இரயில் நிறுத்தம் பற்றிய நடவடிக்கைகள் ஆலோசிக்கப்பட்டது; இந்தப் போராட்டம், ராஜாஜியின் புதிய கல்வித் திட்டத்தை எதிர்த்து நடைபெற்றதல்ல; பிரதமர் நேரு கூறிய சில வார்த்தைகளை ஆட்சேபித்துத்தான் நடைபெற்றது. ஜூலை 15-ந் தேதி நான் மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்குச் சென்றபோது, அங்கு கைது செய்யப்பட்டு ரயில்வேயிய மேலூர் ஸ்டேஷனுக்குக் கொண்டு செல்லப்பட்டேன்; அங்கே, தண்டவாளத்தின் குறுக்கே ஒரு கூட்டத்தினர் உட்கார்ந்து கொண்டிருந்தனர்; அவர்கள் தி மு. கழகத்தைச் சேர்ந்தவர்களில்லை; நான் அவர்களைக் கலைந்து செல்லக் கேட்டும் பலனளிக்கவில்லை; பின் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தின்போது, கூட்டத்தில் நசுக்குண்டு நான் தள்ளப்பட்டேன்; ஒரு போலீஸ்காரர், துப்பாக்கியின் முன்பாகத்தால் என்னைத் தாக்கியதால் நான் காயமுற்றேன்; தி. மு கழகத்தின் மேலுள்ள வெறுப்பின் காரணமாகக் காங்கிரஸ்காரர்களின் தூண்டுதல் பேரில் இந்த வழக்கு தொடரப்பட்டுள்ளது."

6-வதாக நடராசன் கூறியதாவது:—

"நான் மேலூர் ஸ்டேஷனில் இரயில் சங்கிலியைப் பிடித்திழுத்ததாகக் கைது செய்யப்பட்டேன்; மற்ற சம்பவங்கள் பற்றி எனக்கொன்றும் தெரியாது."

7-வதாக கணபதி கூறியதாவது:—

"நானும் மேலூர் ஸ்டேஷனில் ரயில் சங்கிலியைப் பிடித்திழுத்ததாகக் கைது செய்யப்பட்டேன்; மற்ற சம்பவங்கள் பற்றி எனக்கொன்றும் தெரியாது"

பின்னர், 8, 9, 10, 11, 12, 13, 14, 15, 16, 17, 18-வது தோழர்களான சேரங்கம், விஜயராஜன், வெங்கடாசலம், அம்மையப்பா, திருமால், சந்திரன், பிச்சையப்பா, சண்முகையா, ராமசாமி (நாடார்), முத்தையா (கோனார்), பொன்னுசாமி (நாடார்) ஆகியோர் சாட்சியமளிக்கையில், தங்களுக்கு இந்த வழக்குபற்றி ஒன்றும் தெரியாதென்றும், தாங்கள் மில் கூலி வேலைக்காரர்கள் என்றும், ஜூலை மாதம் 14-ந் தேதி இரவு 2 மணி வரையில் மில்லில் வேலை பார்த்ததாகவும் கூறினார்கள்.

இந்த 18 தோழர்களும் தங்களுடைய தரப்பில் விசாரிக்கப்பட சாட்சிகள் ஏதுமில்லை என்று தெரிவித்தார்கள்.

மதுவிலக்கை எதிர்த்துச் சிறை புகுந்தவர்கள்!

மன்னித்து விடுதலை செய்யப்படுகின்றனர்

ஆந்திராவில் மதுவிலக்கை எதிர்த்து நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களில் கைது செய்யப்பட்டு சிறையிலிருக்கிறவர்களை மன்னித்து, ஆந்திர அரசாங்கம் விடுதலை செய்து வருகின்றது.

அப்படி விடுதலை செய்யப்பட்டதுபோக எஞ்சியுள்ள 500-குற்றவாளிகளையும், தங்களின் 'மன்னிப்பு'க் கோரி விடுதலை பெற்றுக் கொள்வதற்காகத் தரப்பட்டிருந்த அவகாசத்தை அக்டோபர் 7-ந் தேதி வரை நீடித்துள்ளனர் என தெரிகிறது.

முன்னுள்ள கள் இறக்குவோர்களாக இருந்த, மதுவிலக்கை எதிர்த்துச் சிறைபுகுந்தவர்களை மட்டுமே முன்பு ஆந்திர அரசாங்கம் மன்னித்து விடுவித்து வந்தது. ஆனால், இப்போது முன்னுள் கள்ளிறக்குவோராக இல்லாமலிருந்தும், எதிர்ப்பு இயக்கத்தில் ஈடுபட்டு சிறைப்பட்டவர்களையும், அரசாங்கம் விடுதலை செய்துவிட முடிவு செய்துள்ளது.

விடுதலை கோருகிற குற்றவாளிகள் எல்லாரும், நிபந்தனை ஏதும் இன்றி மன்னிப்புக் கோர வேண்டுமாம்; அப்போதுதான் விடுதலையாம்!

அகதிகள் புதைத்த செல்வங்கள்!

முஸ்லீம் அகதிகள், இந்தியாவைவிட்டுப் பாகிஸ்தானுக்குப் போகும்போது டில்லியில் புதைத்துவிட்டுப் போன கலை முதலியவற்றைத் தோண்டி எடுக்க, பாகிஸ்தான் ஹைகமிஷனைச் சேர்ந்த அதிகாரிகள் ஆரம்பித்துள்ளார்கள் என்று தெரிய வருகிறது.

இந்தோ—பாகிஸ்தான் ஒப்பந்தத்தின் பேரிலேயே இந்த வேலை நடைபெறுவதாகவும், ஏற்கனவே இம்மாதிரி சில சொத்துக்கள் தோண்டியெடுக்கப்பட்டதென்றும், நகை நட்டுகளைப் புதைத்தவர்களே அனேகமாக அந்தந்த இடங்களை அதிகாரிகளுக்குக் காட்டுவார்கள் என்றும் தெரியவருகிறது.

ஆலகாயாத் பண்டிதரின் ஆசைக் கனவு!

இந்தியா எதிர்காலத்தில் நான்காவது வல்லரசாகுமாம்!

இந்திய அரசாங்கத்தின் வெளிநாட்டுக் கொள்கையை ஏற்றுக் கொண்டு பாராட்டும் தீர்மானம் ஒன்று மக்கள் சபையில் நிறைவேறியது.

வெளிநாட்டுக் கொள்கைகள் பற்றி விரிவாகப் பேசிய பிரதமர் பண்டித நேரு, கோவா பிரச்னை குறித்தும், இலங்கையுடன் கொண்டுள்ள நட்புறவுத் தொடர்பு குறித்தும் விளக்கினார்.

பொதுவான உலக நிலைகளைப் பற்றி அவர் குறிப்பிடுகையில் கூறியதாவது:—

"இன்று இரண்டு பெரும் வல்லரசுகள் ஒன்றோடு ஒன்று போட்டியிட்டுக் கொண்டு வருகின்றன; அந்த இரு வல்லரசுகளும் அமெரிக்காவும், ரஷ்யாவுமாகும்.

இன்று சீனாவும் மிகப் பெரிய வலிமையுடையதாக உருவாகி வருகிறது.

உலக யுத்தமோ அன்றி அதைப் போன்ற சச்சரவுகளோ தோன்றாமலிருக்குமானால், எதிர்காலத்தில் இந்தியா ஒரு சிறந்த வல்லரசாக நான்காவது இடத்தைப் பெற்று விளங்கும்."

இந்திய மொழிகளுள் ஏற்றத் தாழ்வு இல்லை!

இந்தி தேசிய மொழியாக்கப்பட்டது உயர்ந்தது என்பதால் அல்ல!

எழுத்தாளர்கள் நாட்டை ஆக்குபவர்கள்!

பண்டித நேரு தரும் விளக்கம்

புதுடில்லி, அக். 1—

"எழுத்தாளர்களுக்கும் பெரும் பொறுப்புகள் பல உண்டு; மக்களின் எண்ணங்களுக்கு வழிகாட்டுபவர்கள் எழுத்தாளர்களே; தவறான வழி காட்டப்பட்டுவிட்டால், அது மிகவும் அபாயகரமானதாகும்.

"புத்தகம் எழுதப்பட்டால், அப்புத்தகம், மனிதனின் எழுச்சியை உண்மையையும், சிந்தனையைப் பண்பையும் காண முடியும்; இந்த உண்மைப்படி பார்க்க, மலம் வாய்ந்த ஒரு நாட்டிற்கு அடித்தளம் அமைக்கும் பொறுப்பு எழுத்தாளர்களிடம் இருக்கிறது என்பதைத் தெரிந்து கொள்ளலாம்,"

என்று பண்டித நேரு, மராத்தி இலக்கிய மாநாட்டின் 37-வது வருடாந்திரக் கூட்டத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும், பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இந்தி மொழிக்கும் வேறு மொழிகளுக்கும் இடையில் போட்டியோ, பொறாமையோ இருக்கக் கூடாது; ஒரு மொழியைக் காட்டிலும் வேறு ஒரு மொழி சிறந்தது என்கிற போட்டி கூடாது: இந்தியாவில் உள்ள எல்லா மொழிகளும் ஒத்த மதிப்புடையனவேயாகும்.

இந்தி தேசிய மொழியாக்கப்பட்டிருக்கிறதென்றால், அதற்குக் காரணம், அது வேறெல்லா மொழிகளைக் காட்டிலும் சிறந்தது என்று கருதப்பட்டதால் அல்ல; இந்தியைக் காட்டிலும், மராத்தி, வங்காளம், குஜராத்தி ஆகிய மொழிகள் சிற்சில வகைகளில் சிறப்புடையதாக இருக்கலாம்.

இந்தியாவில் வழங்கப்படும் மொழிகளை முதலாவது, இரண்டாவது, மூன்றாவது என்று வரிசைப்படுத்துவதையே நான் தவறு என்கிறேன்.

ஒரு மொழி இன்னொரு மொழியிலும் சிறந்தது என்று சொல்லிக்கொள்ள அரசியல் சட்டம் இடம் தராது.

ஒரு மொழி வளருவது அதன் சொந்த பலத்தைப் பொறுத்ததாகும்.

எனவே, 'என் மொழி பெரிது; உன் மொழி சிறிது,' என்று சண்டையிட்டுக் கொண்டிராமல், இந்தியாவின் இலக்கிய வளர்ச்சிக்கு உதவுகிற வகையில் சிறந்த இலக்கியங்களை எழுத்தாளர்கள் படைக்க வேண்டும்.

எஞ்சினியர்களும், எழுத்தாளர்களும் ஒரு நாட்டிற்கு மிக முக்கியமானவர்கள்; நாட்டு மக்களின் உடல் வளர்ச்சிக்குத் தேவையான அத்தனையும் தருபவர்கள், எஞ்சினியர்கள்; மக்களின் அறிவு வளர்ச்சி, சிந்தனை வளர்ச்சி, உள்ள வளர்ச்சி அத்தனைக்கும் உதவுபவர்கள் எழுத்தாளர்கள்தான்," என்றார்.

இலங்கையின் ஆட்சி மொழி

கொத்தலாவலை உறுதி

கொழும்பு, செப். 30—

"இலங்கை அரசியல் சட்டத்தைத் திருத்தி, தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளையுமே இலங்கை அரசாங்க மொழிகளாக்கத் தீர்மானித்திருக்கிறேன். இத்திருத்தத்தினால் தமிழரும், சிங்களவரும் சட்ட பூர்வமாகச் சம அந்தஸ்து பெறுவதற்கு ஒரு வாய்ப்புக் கிடைக்கும். ஆகவே, அரசியல் சட்டத்தைத் திருத்தி, மொழிப் பிரச்சினையை ஒரு வழியமைத்துத் தீர்த்துவைக்கிறேன்."

இவ்வாறு, இலங்கைப் பிரதமர் சர். ஜான் கொத்தலாவலை, யாழ்ப்பாணம் கொக்குவிலுள்ள இந்துக் கல்லூரியில் நடைபெற்ற வரவேற்புக் கூட்டம் ஒன்றில் கூறியிருக்கிறார்.

தமிழர்களுக்கு உறுதி கூறும் முறையில், இலங்கையில், தமிழ், சிங்களம் ஆகிய இரண்டு மொழிகளுக்கும் சம அந்தஸ்து கொடுக்க வேண்டுமென்று இலங்கை அரசாங்கக் கட்சி (பார்லிமெண்ட் கட்சி) தீர்மானித்திருப்பதாகவும், இதைத் தாம் நடக்கவே இலங்கை அரசாங்கமும் உத்தேசித்திருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில் இலங்கையிலுள்ள இடங்களெல்லாம் ஒரு தனிப்பட்ட சாதியினருக்கோ அல்லது வகுப்பாருக்கோ அல்லாமல், இலங்கையிலுள்ள ஒவ்வொருவருக்கும் சொந்தமானதுதான் என்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

சௌந்திர பாண்டியனார் பகுத்தறிவு மன்றம்

தாராவி (பம்பாய்), செப். 30—

26 9-54 மாலை 6-30 மணிக்கு மன்றச் சார்பில், தோழர் எம். கன்னியப்பா தலைமையில் நடைபெற்ற பெரியார் ஈ. வே. ரா. அவர்களின் பிறந்த தின விழாவை தோழர் மா. இரா. குறள்தாசன் அவர்கள் துவக்கி வைத்தார். தோழர்கள் சா. தர்மராசன், பி எஸ். செல்லையா, சி த. மு இர. அரியசங்கரன், இரா. மா. சண்முகராசன், உ. அ. செல்லையா ஆகியோர் பேசினார்.

நெல்லிக்குப்பத்தில் திரு. வி. க. நினைவு விழா

29—9—54ல், இந்நகர் வடலூர் பெரியார் சங்கச் சார்பில், தோழர் தெய்வசிகாமணி தலைமையில் நடைபெற்ற திரு. வி. க. நினைவு விழாப் பொதுக் கூட்டத்தில் தோழர்கள் வி. அ. பெ. வில்வநாதம், ச. ராசகோபால், கே. ஏ. எம். ஷெரீப், மஞ்சராசம் ஆகியோர் திரு. வி. க.-வின் தமிழ்த் தொண்டைப் பற்றி சொற்பொழிவாற்றினர். மேற்படிச் சங்கத்தாரால், திரு. வி. க. அவர்களின் மணிமண்டப நிதிக்காக ரூ. 51 தோழர் வி. அ. பெ. வில்வநாதன் அவர்களிடம் அளிக்கப்பட்டது.

மன்னார்குடியில் திரு. வி. க. படத் திறப்பு

26—9—54 மாலை 6 மணிக்கு திரு. கிருஷ்ணமூர்த்தி தலைமையில் தோழர் சண்முகசுந்தரம் திரு. வி. க. படத்தைத் திறந்து வைத்தார். பின்னர், திரு. வி. க. அவர்களின் வாழ்க்கை வரலாறு பற்றி தோழர்கள் பெ. மாணிக்கவாசகம், க. அண்ணாதுரை ஆகியோர் பேசினர்.

பிரான்சின் உறுதி தளர்ந்தது!

ஜெர்மனி இராணுவ தளமாக மாறுகிறது!

ஐந்து இலட்சம் துருப்புக்கள் வைத்துக்கொள்ள அனுமதி!

9 நாடுகள்-மாநாட்டில் ஒப்பந்தம் நிறைவேறிற்று!

லண்டன், அக். 3—

ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் பிரச்சினை பற்றி நடைபெறும் 9 வல்லரசு மாநாட்டில், மேற்கு ஐரோப்பிய நாடுகளின் பாதுகாப்புக்கு மேற்கு ஜெர்மனியை ஆயுதபாணியாக்கும் திட்டம் நிறைவேற்றப்பட்டு கையெழுத்திடப்பட்டது.

அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ் ஆகிய நாடுகள் மேற்கு ஜெர்மனியில் தங்களது ஆதிக்கத்தை உடனடியாகக் கைவிட்டு விடுவதாகவும், மேற்கு ஜெர்மனி சுதந்திரமடைய தாங்கள் பிரதிக்ஞை எடுத்துக்கொள்வதாகவும் கூறியிருக்கின்றனவாம்!

இந்த 9 தேச மாநாட்டில் அமெரிக்கா, பிரிட்டன், பிரான்ஸ், மேற்கு ஜெர்மனி, ஹாலந்து, பெல்ஜியம், இத்தாலி, லக்ஸம்பர்க், கனடா ஆகிய நாடுகள் கலந்துகொண்டன.

பிரான்சும், மேற்கு ஜெர்மனியும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்ததின் காரணமாகவே, ஏற்கனவே இருந்துவந்த முட்டுக்கட்டை நீங்கி ஒப்பந்தம் ஏற்பட்டது என்று தெரிகிறது.

இந்தப் புது ஒப்பந்தத்தின்படி ஐரோப்பியப் பாதுகாப்புக்கு, மேற்கு ஜெர்மனி 5 லட்சம் துருப்புக்களையும், 1350 விமானங்களையும், சிறிய கடற்படைகளையும் சேகரிக்கும்; இந்தப் படைகள் யாவும், அட்லாண்டிக் ஒப்பந்த இராணுவத் தலைமையின் கீழ் இருந்துவரும்; ஐரோப்பியப் பாதுகாப்பில் பிரிட்டன் நேரடியாகப் பொறுப்பெடுத்துக் கொள்ள வேண்டும் என்ற பிரான்சின் கோரிக்கைக் கிணங்க, பிரிட்டன் 4 டிவிஷன் துருப்புகளையும், ஒரு விமானப் படையும் வைத்திருக்கும்.

முன் நடந்த மாநாட்டில், ஐரோப்பிய இராணுவத் திட்டம் நிறைவேற்றப்படாததால், தம் வாக்குறுதியை கிரகரித்த அமெரிக்க அரசாங்க மந்திரி டல்லஸ், இப்போது மறுபடியும், இத்திட்டத்தை எல்லா உறுப்பினர் நாடுகளும் அங்கீகரித்தால் ஐரோப்பாவில் அமெரிக்கப் படைகள் நீடித்திருக்க அமெரிக்க ஜனாதிபதிக்கு யோசனை கூறுவதாகத் தெரிவித்திருக்கிறார். மேற்கு ஜெர்மனியின் பிரதமர் அடினார், ஜெர்மனியைப் பலாத்காரமாகத் தன்னுடன் இணைப்பதற்குத் தாம் ஒருபோதும் தமது படைகளை உபயோகிப்பதில்லை என்றும் வாக்குறுதி தந்துள்ளாராம்.

பிரஸல்ஸ் ஒப்பந்தத்தில் மேற்கு ஜெர்மனியும், இத்தாலியும் சேர்க்கப்பட்டிருப்பது ஒரு முக்கியமான விஷயமாகும். ஜெர்மன் சுதந்திர உடன்பாடு சமர்த்தப்பட்ட வரையிலும், மேற்கு பெர்லின் — ஜெர்மன் ஐக்கியம் பற்றி சோவியத் நாடுகளுடன் பேச்சுவார்த்தை நடத்த மேற்கு வல்லரசுகளிடமே முழு பொறுப்பும் இருக்கும் என்று தெரிகிறது.

இந்தப் புது திட்டத்தை, பிரஞ்சுப் பார்லிமெண்ட் உட்பட எல்லா நாடுகளும் அங்கீகரித்தால் அடுத்த ஆண்டு ஆரம்பத்திற்குள் ஜெர்மன் படை உருவாகிவிடும்.

இந்த ஒப்பந்தத்தின் காரணமாக ஜெர்மன், அணுசக்தி ஆயுதங்கள், கிருமி ஆயுதங்கள், விஷப் புகை போன்ற ரசாயன ஆயுதங்களை உற்பத்தி செய்யக்கூடாது. மேலும், மற்ற ஆயுதங்களின் உற்பத்தியும் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்டே இருக்க வேண்டும். பாதுகாப்புக்கு அத்தியாவசியமான சிலவகை ஆயுதங்கள் மட்டும் தயாரிக்கலாமென்று ஜெர்மனுக்குப் பிரான்ஸ் சலுகை காட்டியிருக்கிறது.

"இந்தச் சமயத்தில் ரஷியா, ஐரோப்பிய நாடுகளைத் தாக்கினால், அத்தாக்குதலை ஐரோப்பிய நாடுகள் சமாளிக்க முடியாவிட்டாலும், நீண்டகால அடிப்படையில் முறியடிக்க முடியும் என்றும், இன்னும் 3, 4, ஆண்டுகளுக்குள் ஐரோப்பிய நாடுகள், ரஷியா போன்ற நாடுகளின் தாக்குதல்களை உடனடியாக எதிர்த்து முறியடிக்கும் வலுப்பெறும் என்றும், ஜெர்மன் இராணுவமும், அணு ஆயுதங்களும் மேற்கு ஐரோப்பியப் பாதுகாப்பில் சேர்ந்தால், இந்த நிலைமை வெகு சுலபமாகவும் இருக்குமல்லாமல்—இவைகள் சேர்ந்தால்தான் சாத்தியமென்றும் ஐரோப்பாவிலுள்ள நேசதேச சேனாதிபதி ஜெனரல் குருவெந்தர் தெரிவித்திருக்கிறாராம்.

மூன்றாவது சக்தியாக யூகோ இயங்குமா?

ஜனாதிபதி டிட்டோ விளக்கம்

"உலகத்திலே மூன்றாவது பெரிய சக்தியாக இயங்க யூகோ விரும்பவில்லை; ஆனால், சர்வதேச அமைதியை நிலைநிறுத்தப் பாடுபடும் சக்திகளை ஐக்கியப் படுத்துவதில் அது உதவியளிக்க விரும்புகின்றது."

என்று, லண்டனில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் யூகோவின் ஜனாதிபதி டிட்டோ பேசியிருக்கிறார்.

மேலும் அவர் பேசுகையில், "உலகத்திலுள்ள முற்போக்குச் சக்திகளை ஆதரிப்பதே யூகோவின் கொள்கை; இந்தக் கொள்கையின் காரணமாகவே இந்தியா, பர்மா நாடுகளுடன் யூகோவின் நேச மனப்பான்மை ஏற்பட்டுள்ளது," என்றார்.

இந்தியா, பர்மா நாடுகளுக்கும், யூகோவுக்கும் நெருங்கிய நேச மனப்பான்மை உண்டாகவே கொண்டு வருவதாகவும், இந்தியா, பர்மா பிரதமர்களின் அழைப்பை ஏற்றுக்கொண்டு தவர் வரவிருப்பதாகவும், நேரில் சென்று அந்த நாடுகளின் நிலைமையறிந்து நல்ல அனுபவம் பெறவும், யூகோவின் நிலைமைகளை அவைகளுக்கு எடுத்துச்சொல்லப் போவதாகவும் அவர் தெரிவித்தார்.

சம்பள உயர்வு

சென்னை, அக். 3—

சென்னை மாநிலத்தில், நகரசபைகளில் வேலை செய்துவரும் சானிட்டரி இன்ஸ்பெக்டர்களின் சம்பள விகிதங்களை, சுகாதார இன்ஸ்பெக்டர்களின் சம்பள விகிதங்களுக்குச் சமமாக சென்னை சர்க்கார் உயர்த்தியிருக்கிறதாம்.

நாகர்களுடன் போலீஸ் மோதல்!

இம்பால், அக். 3—

நாகமலைக்கருகில் உள்ள மாவோ என்னும் இடத்தில் சுமார் 200 நாகர்கள் அடங்கிய கோஷ்டிக்கும் போலீஸ் படை ஒன்றுக்கும் இடையில் ஏற்பட்ட மோதுதலின் விளைவாக ஒரு சப்-இன்ஸ்பெக்டருக்கும் இரண்டு போலீசாருக்கும் காயமேற்பட்டதாம்.

ஒரு மோட்டார் பஸ்ஸில் பிரயாணம் செய்து கொண்டிருந்த ஒரு பெண்மணி, தனது மூட்டையில் வைத்திருந்த தங்க நகைகள் சில காணாமற்போய்விட்டதாகப் போலீசாரிடம் புகார் செய்தாராம். உடனே ஒரு போலீசார் பஸ்ஸில் பிரயாணம் செய்த எல்லோரையும் சோதனையிட முற்பட்டனராம். இதை இரண்டு நாகர்கள் எதிர்த்திருக்கிறார்கள். போலீசாருடன் அவர்கள் வாக்குவாதம் செய்கையில் அவர்களுடன் பல நாகர்கள் சேர்ந்து கொண்டு போலீசாரைத் தாக்க முற்பட்டனராம்.

பிறகு ஒரு உதவி போலீஸ் சூப்பிரண்டெண்ட் தலைமையில் போலீஸ் படை ஒன்று சென்று 6 நாகர்களைக் கைது செய்து நிலைமையை கட்டுப்படுத்தினராம்.

மக்கள் சீனா முஸ்திபு

தாக்குதல் எப்பமோ?

சியாங் வசமுள்ள குமோய், டாசன் ஆகிய இடங்களில் ஒரே நேரத்தில் தாக்குதல் நடத்த சீனக் கம்யூனிஸ்டுகள் ஆயத்தம் செய்து கொண்டு வருவதாகத் தெரிகிறது.

தேசிய சீன இராணுவ அதிகாரி, எதிரிகளை முறியடிக்கத் தாங்கள் தயாராக இருப்பதாகவே அறிவித்திருக்கிறாராம்.

தெற்கு செக்கியாங் கரைகளில் கம்யூனிஸ்டு படைகள் குவிக்கப்பட்டு வருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்றும் கூறப்படுகிறது.

உகாந்தாவில் பணிபுரிய திராவிட ஆசிரியர்கள்

உகாந்தா நாட்டில் ஆசிரியர் பணி புரிய சுமார் 100 பேர்களை அழைத்துச்செல்லும் பொருட்டு உகாந்தா அரசாங்க கல்வி இலாகா அதிகாரிகள் இருவர் இந்தியா வந்துள்ளனர்.

அந்த அதிகாரிகள், தங்களுக்குத் தேவையான ஆசிரியர்களைத் தேர்ந்தெடுக்கும் பொருட்டு, இந்த பகுதியில் சுற்றுப் பயணம் செய்வதுடன் சென்னை, திருவனந்தபுரம், பெங்களூர் ஆகிய இடங்களுக்கும் வருகை தருவர் எனத் தெரிகிறது.

பின்தங்கிய வகுப்பினர் உபகாரச் சம்பளங்கள்

மெட்ரிகுலேஷனுக்கு மேற்பட்ட வகுப்புகளில் கல்வி கற்கும் ஷெடியூல் வகுப்புகள், ஷெடியூல் குடிகள், மற்றும் இதர பின்தங்கிய வகுப்புகள் ஆகியோருக்கு, 1954-55ம் ஆண்டில் வழங்கப்படுவதற்கான உபகாரச் சம்பளங்களுக்காக இந்திய சர்க்கார் மேற்கொண்டு 32 லட்சம் ரூபாய் அனுமதித்திருக்கின்றனர். இந்த ஆண்டில் மொத்தம் 107 லட்ச ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டில் வழங்கப்படவிருக்கும் உபகாரச் சம்பளங்களின் எண்ணிக்கையும் 14,000-லிருந்து 20,000 ஆக அதிகரித்திருக்கிறது.

வட ஆற்காடு மாவட்டத்தில் சர்க்கரை ஆலை!

— (:) —

கூட்டுறவுமுறையில் ஆரம்பிக்கப்படும்

ரூ. 70 லட்சம் முதலீடு தேவை!

வேலூர், அக். 4—

ரூ 70 இலட்சம் செலவில் சர்க்கரை ஆலை ஒன்றைத் துவக்குவதற்காக கூட்டுறவு சங்கம் ஒன்றை நிறுவ ஏழு பேர் அடங்கிய குழு ஒன்று, இங்கு நடைபெற்ற வேலூர், குடியாத்தம், திருப்பத்தூர் தாலுக்கா கரும்பு உற்பத்தியாளர் மாநாட்டில் உருவாக்கப்பட்டுள்ளது.

மாநில கூட்டுறவு இலாகா அதிகாரியான ஜே. சி. ரயன் அவர்கள், இத்திட்டத்தை விளக்கிப் பேசுகையில் கூறியதாவது:—

"கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கப்படுகிற இந்த சர்க்கரை ஆலைக்குத் தேவையான முதலீடான ரூ 70 இலட்சத்தில், கரும்பு உற்பத்தியாளர்கள் ரூ. 10 இலட்சம் தரவேண்டும்; மாநில அரசாங்கம் ரூ 10 இலட்சம் கடனாகவும், மத்திய அரசாங்கம் ரூ 20 இலட்சம் கடனாகவும் தருவார்கள். எஞ்சியுள்ள ரூ. 30 இலட்சமும், மாநில கூட்டுறவு பாங்கில் கடனாகப் பெற்றாக வேண்டும்," என்றார்.

மத்திய அரசாங்க விவசாய மந்திரியான பஞ்சாப்ராவ் தேஷ்முக் மாநாட்டில் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"இப்பகுதி மக்கள் இம்முயற்சியைத் துரிதப்படுத்தினால் மத்திய அரசாங்க உதவி நிச்சயம் கிடைக்கும்," என்றார்.

சென்னை விவசாய மந்திரி பக்தவத்சலம் பேசுகையில், கூறியதாவது:—

"சென்னை மாநில மக்களுக்குத் தேவையான அளவில் பாதி அளவு சர்க்கரைகூட இப்போது சென்னை மாநிலத்தில் உற்பத்தியாகவில்லை; எனவே, கரும்பு உற்பத்தியாளர்கள், கூட்டுறவு முறையில் ஆரம்பிக்கும் சர்க்கரை ஆலை வெகுவாக வரவேற்க வேண்டிய ஒன்றாகும்," என்றார்.

இம்முயற்சியை ஈடேற்ற, முதலீட்டை பணம் சேகரிக்கும் பொருட்டு நியமிக்கப்பட்டுள்ள குழுவில் பி. எஸ். ராஜகோபால் நாயுடு எம். பி., ராஜா ரெட்டியார், சௌந்தரராஜ முதலியார், சி. ராகவ முதலியார் எம். எல். ஏ., ஹனுமந்த கவுண்டர் எம். எல். ஏ., வி. எம். ராமசாமி முதலியார், டி. எம். முனுசாமி நாயுடு ஆகியோர் உள்ளனர்.

ஜப்பானில் மின்கதிரியக்க மழை!

ஜப்பான் கடற்கரை ஓரத்தில் உள்ள மாவட்டங்களிலும் 'டோகுரு' எனும் இடத்திலும் கடந்த வாரத்தில் மின்கதிரியக்க மழை பொழிந்ததாகக் கூறப்படுகிறது.

ஆர்க்டிக் பிரதேசத்தில் சோவியத் ரஷியா பரிசோதித்துப் பார்த்த நீர்வளிக் குண்டின் விளைவுகள்தானோ இந்த மழை என்று ஜப்பான் மக்களிடையே ஒரு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

நீர்வளிக்குண்டு வெடித்ததின் விளைவாக மணிக்கு 500 அடி வேகத்தில் கடல் அலைகள் பிரயாணம் செய்தனவாம்.

சோவியத் அரசாங்கம் செப். 16-ல் வெடித்ததாக அறிவித்த நீர்வளிக் குண்டினால்தான் ஜப்பானில் மின்கதிரியக்க மழை பொழிந்ததாக ஜப்பானிய ஆராய்ச்சியாளர்கள் அறிவித்தனர்.

இந்தியரை வெளியேற்ற இலங்கையின் 'தந்திரம்!'

தாங்களாகவே இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்துகொள்ளும் இலங்கை இந்தியர்களுக்கு நஷ்டஈடும், போனசும் கொடுக்க இலங்கை சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

வலுப்படுத்தி, அவர்களை இந்தியர்கள் என்று கூறி வெளியாக்குவதற்குப் பதிலாக, அவர்களாகவே, தாங்கள் இந்தியக் குடிமக்கள் தான் என்று ஒப்புக்கொள்ளச் செய்வதற்காகவே இத்திட்டம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்று தெரியவருகிறது.

'எந்த இலங்கை இந்தியரையும் கட்டாயமாக இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்யாமல், தாங்களாகவே வந்து இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்து கொண்டால்தான் ஏற்றுக்கொள்வோம்,' என்பதுதான் இந்திய அரசாங்கத்தினுடைய கொள்கை.

இதன் காரணமாக, 'நாடற்றவர்' என்ற நிலையிலிருக்கும் பல்லாயிரம் இந்திய மக்கள், போனஸ் திட்டத்தில் மயங்கி தாமாகவே சென்று இந்தியக் குடிமக்களாகப் பதிவு செய்து கொள்வார்கள் என்று இலங்கை அரசாங்கம் எதிர்பார்க்கிறதாம்!

கொழும்புவில் நடைபெற்ற பொதுக் கூட்டம் ஒன்றில், இலங்கை சமஷ்டிக் கட்சித் தலைவர் பேசுகையில், இலங்கையிலுள்ள 8 லட்சம் இலங்கை இந்தியரும இலங்கையைச் சேர்ந்தவர்களே யல்லாமல், இந்தியக் குடிகளோ அல்லது 'நாடற்றவரோ' அல்ல; இதை எந்த ஒரு நாட்டின் விதியும் மறுக்காது—மறுக்கவும் முடியாது" என்று குறிப்பிட்டிருக்கிறார்.

இலங்கைப் பிரதமருக்குக் கருப்புக் கொடி

ஆர்ப்பாட்டக்காரர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம்

யாழ்ப்பாணம், அக் 2—

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலைக்கு யாழ்ப்பாணம் நகர மண்டபத்தில், 29—9—54ல், ஒரு பொது வரவேற்பு நடைபெற்றது. அவர் மைதானத்தில் பிரவேசித்ததும், இலங்கை தமிழரசுக் கட்சியினர் அவரை எதிர்த்துக் கருப்புக் கொடி காட்டினர். அவர்கள் மீது போலீசார் தடியடிப் பிரயோகம் செய்யவே, கூட்டத்தில் பெருங் குழப்பம் உண்டாயிற்று என்றும் தெரியவருகிறது. தடியடியின் காரணமாக ஒருவர் காயமுற்றார் என்றும் தெரிகிறது.

திராவிட முன்னேற்றக் கழகத் தமிழ்ச் சங்க அச்சக தோழர் இரா. செழியன் பிரசுரிப்பவர், எம். ஏ. அவர்களால், அறிவகம் அச்சகத்தில் அச்சிடப்பட்டு, சென்னை வெளியிடப்படுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை எம். ஏ.